பிஎஃப்எஸ்பிஎல்/2023-24/1.0

PAHAL

**நியாயமான நடைமுறைக் குறியீடு**

இந்த நியாயமான நடைமுறைக் குறியீடு கூட்டுப் பொறுப்புக் குழுக்கள், தனிநபர் கடன்கள் மற்றும் பாதுகாப்பான கடன்கள் முதலானவற்றுக்கு பொருந்தும்.

பஹல் நிதியச் சேவைகள் பிரைவேட் லிமிடெட் (இதன் பின்னர் பிஎஃப்எஸ்பிஎல் என அறியப்படுவது) குறுநிதி வசதியை ஏழைகளுக்கும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கும் நீட்டிக்கிறது. இந்த அமைப்பு கற்றறிந்த அனுபவம் மிக்க பயிற்சியாளர்கள் மற்றும் தொழில்துறை வல்லுநர்களைக் கொண்ட சம நிலையான அணியால் நிர்வகிக்கப்படுகிறது. இந்த நிர்வாக சபை ஏற்றுக்கொண்ட "நியாயமான நடைமுறைக் குறியீடு" கீழ்க்கண்டவாறு.

**கடன் விண்ணப்பங்கள் மற்றும் செயலாக்கம்**

அ. கடன் வாங்குபவருடனான அனைத்து தொடர்பும் வட்டார மொழியிலோ அல்லது கடன் வாங்குபவர் புரிந்து கொள்ளும் மொழியிலோ இருக்கும்.

ஆ. கடன் விண்ணப்பத்தில் கடன் வாங்குபவரின் எண்ணத்தை பாதிக்கும் அவசிய தகவல் கூட இருக்கும். அதன் மூலம் பிற கடன் வழங்குபவர்களின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை அர்த்தமுள்ள ஒப்பீடு செய்து தகவலறிந்த முடிவு கடன் வாங்குபவர் எடுக்க முடியும். கடன் விண்ணப்ப படிவத்தில் கடன் திட்டத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்க்ள் குறித்து குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

இ. பிஎஃப்எஸ்பிஎல் கடன் வாங்குபவர்களிடம் இந்திய ரிஸர்வ் வங்கியுடைய "உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்துகொள்ளுங்கள்" நியமங்களுக்கு இணங்க அனைத்து அவசிய ஆவணங்களையும் பெறவேண்டும்.

ஈ. பிஎஃப்எஸ்பிஎல் இணையதளத்திலும், அதன் அனைத்து கிளை வளாகங்களிலும் மற்றும் நிறுவனத்தினுடைய பிற தகவல் வெளியீடுகளிலும் இந்தியக் குறுநிதிக் கடன்கள் மீது விதிக்கப்படும் குறைந்தபட்ச, அதிகபட்ச மற்றும் சராசரி வட்டி விகிதங்களை முக்கியமாகக் காண்பிக்க வேண்டும்.

உ. கடன் விண்ணப்பத்தில் கடன் பெறுவதற்குத் தேவையான ஆவணங்களின் பட்டியல் இருக்க வேண்டும்.

ஊ. கடன் வாங்குபவருக்கு கொடுக்கப்படும் கடன் அட்டையில் அவ்வப்போது இந்திய ரிஸர்வ் வங்கி குறிப்பிடும் அனைத்து தொடர்புடைய விவரங்களும் இருக்க வேண்டும். (இந்தியக் குறுநிதிக் கடன்கள்)

எ. பிஎஃப்எஸ்பிஎல் கடன் வகை குறித்த அனைத்து விவரங்களுடன் கூடிய விவர மடலுடன் தொகை நிர்ணய தகவல் மற்றும் கடன் வாங்குபவரிடம் வசூலிக்கப்பட்ட கட்டணம் குறித்த விவரம் அளிக்க வேண்டும். (இந்திய குறுநிதிக் கடன்கள்)

பிஎஃப்எஸ்பிஎல் அனைத்து கடன் விண்ணப்பங்களும் பெறப்பட்டதற்கு ஒப்புகை கொடுப்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும். கடன் திட்டங்கள் செயலாக்கப்படும் கால அளவு குறித்து வருங்கால கடன் வாங்குபவர்களுக்குக் குறிப்பிட வேண்டும். (கடன் திட்டத்தின் அடிப்படையில் கால அளவு மாறும்)

**கடன் மதிப்பீடு மற்றும் விதிமுறைகள்/நிபந்தனைகள்**

அ. பிஎஃப்எஸ்பிஎல் எழுத்துமூலமாக கடன் வாங்குபவருக்கு வட்டார மொழியில் கடன் வாங்குபவர் புரிந்துகொள்ளும் விதத்தில் இசைவுக் கடிதம் அல்லது இல்லையெனத் தெரிவிக்க வேண்டும். அனுமதிக்கப்பட்ட கடன் தொகை, விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லாது வருடாந்தர வட்டி விகிதம் மற்றும் அது கணக்கிடப்படும் விதம் குறிப்பிட்டு இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் கடன் வாங்குபவர் ஒப்புக்கொண்டதைப் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

ஆ. பிஎஃப்எஸ்பிஎல் தாமதமாக செலுத்தப்படும் தொகைக்கு அபராத வட்டி வசூலிக்காது / முன் கூட்டியே செலுத்தப்படும் தொகைக்கு வட்டி வழங்காது மற்றும் எந்த பாதுகாப்பு வைப்போ/எல்லையோ நிர்ணயிக்கவில்லை. பாதுகாப்பான சொத்து வணிகத்துக்கு இது பொருந்தாது.

இ. பிஎஃப்எஸ்பிஎல் முன்போ அல்லது கடன்தொகை வழங்கப்படும்போதோ இந்த கடன் ஒப்பந்தம் முழுவதுமாக படிக்கப்பட்டது மற்றும் கடன் வாங்குபவருக்கு வட்டார மொழியில் விளக்கப்பட்டது என்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

ஈ. பிஎஃப்எஸ்பிஎல் அனைத்து கடன் விண்ணப்பங்களுக்கும் ஏற்கெனவே திரும்பச் செலுத்தப்பட வேண்டியுள்ள வீட்டுக் கடன் / கடன் வாங்குபவர் கடன் / இணைக்கடன் வாங்குபவர் கடன் பொறுப்புகள் குறித்த விவரங்களைப் பணியக அறிக்கை மூலம் பெறவேண்டும். நிறுவனம் பணியக அறிக்கை அடிப்படையில் கடன் வாங்குபவர்களுக்கு கடன் ஒப்புதல் குறித்து தகவலறிந்த முடிவைத் தெரிவிக்க வேண்டும்.

**விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் மாற்றங்களுடன் கடன்கள் வழங்குதல்**

அ. பிஎஃப்எஸ்பிஎல் கடன் வாங்குபவருக்கு வட்டார மொழியில் கடன் வாங்குபவர் புரிந்துகொள்ளும்படி விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மாற்றங்களுடன் கடன் வழங்கல் அட்டவணை, வட்டி விகிதங்கள், சேவைக் கட்டணங்கள், முன் கட்டணங்கள் முதலியன குறித்து அறிவிப்பு கொடுக்க வேண்டும். பிஎஃப்எஸ்பிஎல் வட்டி விகிதங்களிலும் கட்டணங்களிலும் ஏற்படும் மாற்றங்கள் வருங்காலத்தில் செயல்படுத்தப்படும் என்பதை உறுதி செய்துகொள்ள் வேண்டும்.

ஆ. பிஎஃப்எஸ்பிஎல் அனைத்து பாக்கி தொகைகளும் திரும்பச் செலுத்தப்பட்ட பின்னரோ அல்லது பாக்கியுள்ள கடன்தொகை பெறப்பட்ட பின்னரோ கடன் வாங்குபவருக்கு எதிராக நியாயமான உரிமையோ வேறு பிற பிணய உரிமையோ இல்லாதிருக்கும் பட்சத்தில் அனைத்து ஈடுகளையும் விடுவிக்க வேண்டும். அப்படிப்பட்ட கொடுப்பதற்கான உரிமை செயல்படுத்துவதற்கு கடன் வாங்குபவருக்கு மீதமுள்ள உரிமைகோரல்கள் மற்றும் நிபந்தனைகளின்படி சம்பந்தப்பட்ட உரிமைகோரல் தீர்க்கப்படும்வரை / செலுத்தப்படும்வரை ஈடுகளை பிஎஃப்எஸ்பிஎல் வைத்துக் கொள்ள உரிமை உண்டு. தனி நபர் கடனுக்கும் பாதுகாப்பான சொத்து வணிகத்துக்கும் பொருந்தும்.

**பொது**

அ. பிஎஃப்எஸ்பிஎல் கடன் ஒப்பந்தத்தில் கொடுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் சம்பந்தப்பட்ட நோக்கம் அல்லாது கடன் வாங்குபவர் / உறுப்பினர் விவகாரங்களில் குறுக்கீடு செய்வதைத் தவிர்க்கும். (கடன் வாங்குபவரால் தெரிவிக்கப்படாமல் புதிய தகவல் எங்கள் கவனத்திற்கு வந்தால் அல்லாது).

ஆ.

இ. பிஎஃப்எஸ்பிஎல் கடன்வாங்குபவருடைய கணக்கை மாற்றுவதற்கான வேண்டுகோளை ஏற்கும் அல்லது ஏற்காவிட்டால் நிறுவனத்தின் மறுப்பு வேண்டுகோள் கிடைத்து 21 நாட்களுக்குள்ளாக தெரிவிக்கப்படும். அப்படிப்பட்ட மாற்றம் சட்டப்படியான வெளிப்படையான ஒப்பந்த விதிமுறைகளின்படி இருக்கும். கடன்கள் திரும்பப் பெறுதலுக்கு பிஎஃப்எஸ்பிஎல் தேவையற்ற துன்புறுத்தலில் அதாவது விடாப்பிடியாக கடன் வாங்குபவர்களை அகால நேரங்களில் தொந்தரவு செய்தல் மற்றும் பலவந்தம் செய்வதில் ஈடுபடாது. பிஎஃப்எஸ்பிஎல் அதனுடைய ஊழியர்களுக்கு வாடிக்கையாளர்களை பொருத்தமான முறையில் கையாள போதுமான பயிற்சி அளித்திருப்பதை உறுதி செய்கிறது. (*மேலும் தகவலுக்கு பிஎஃப்எஸ்பிஎல் நடத்தை நெறிமுறையைப் பார்க்கவும்*)

ஈ. பிஎஃப்எஸ்பிஎல் அமைப்புக்குள் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட குறை திர்க்கும் முறை உள்ளது. இந்த தயாரிக்கப்பட்ட குறை தீர்க்கும் முறை அனைத்து அலுவலகங்களிலும் பிஎஃப்எஸ்பிஎல் உடைய இணையதளத்திலும் முக்கியமாக வைக்கப்பட்டுள்ளது. நிறுவனம் எப்போதும் விலைக் கொள்கை அடிப்படையில் வட்டி விகிதத்தை நிதியச் செலவு, எல்லை, காப்பீட்டுப் பிரீமியம் முதலிய தொடர்புடைய காரணிகளின் அடிப்படையில் பரிசீலித்து குழுவால் அங்கீகரிக்கப்பட்டு பின்பற்றும்.

நிறுவனம் வெவ்வேறு விதமான திட்டங்களுக்கு குறைந்த பட்ச, அதிகபட்ச, சராசரி வட்டி விகிதங்களை முறையான தொடர்பு மூலமும், அனைத்து அலுவலகங்கள்/கிளை வளாகங்களில் வைப்பதன் மூலமும், நிறுவன இணையதளத்தின் மூலமும், நிறுவனத்தின் பதிப்பு மூலமும் அறிவிக்கிறது. நிறுவனம் ஒப்புதல் கடிதம்/கடன் அட்டையில் வட்டிவிகிதத்தை வெளிப்படையாகத் தெரிவிக்கிறது.

உ.

ஊ. வட்டி விகிதம் வருடாந்திர அடிப்படையில் விதிக்கப்படும். செயலாக்கக் கட்டணம் இந்திய ரிஸர்வ் வங்கியில் நிர்ணயிக்கப்பட்ட வரம்பை விட அதிகமாக இருக்கக்கூடாது. உறுப்பினர் மற்றும் வாழ்க்கைத் துணை/இணை கடன் வாங்குபவர் கடன் காப்பீடு பிரீமியம் பொருந்தும்படி இருக்க வேண்டும்.
கடன் சம்பந்தப்பட்ட வட்டி விகிதம் மற்றும் பிற கூறுகளும் அனைத்து அலுவலகங்களிலும் நிறுவன இணையதளத்தின் மூலமும் உடனடியாகக் கொடுத்து வட்டி விகிதம் மாறும்போதெல்லாம் புதுப்பிக்க வேண்டும்.

எ. பிஎஃப்எஸ்பிஎல் ஒப்பந்தம்/கடன் வாங்குபவருடனான கடன் ஒப்பந்தம் மீண்டும் கைப்பற்றுதல் உட்கூறு அமைக்கப்பட்டிருப்பது சட்டப்படி அமலாக்கப்பட்டுள்ளது. வெளிப்படைத் தன்மையை உறுதி செய்ய, ஒப்பந்தம்/கடன் ஒப்பந்தம் கீழான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் கீழ்கண்ட விவரங்களும் உள்ளன:

(அ) கையகப்படுத்துவதற்கு முன்பு அறிவிப்பு காலம்

(ஆ) அறிவிப்பு காலம் தள்ளுபடி செய்யப்பட வேண்டியதற்கான சூழ்நிலைகள்

(இ) ஈடு கையகப்படுத்துவ்தற்கான செயல்முறை

(ஈ) சொத்து விற்பனை / ஏலமிடுவதற்கு முன்பாக கடன் வாங்குபவருக்கு கடைசி சந்தர்ப்பம் வழங்குவது குறித்த ஏற்பாடு

(உ) கடன் வாங்குபவருக்கு திரும்பக் கொடுப்பது குறித்த செயல்முறை

(ஊ) சொத்தை விற்பதற்கான / ஏலமிடுவதற்கான செயல்முறை

ஏ. அப்படிப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் உடைய ஒரு நகல் கடன் வாங்குபவரின் வேண்டுகோளுக்கு இண்ங்க கொடுக்கலாம். பாதுகாப்பான சொத்து வணிகத்துக்கும் பொருந்தும்.

ஐ. பிஎஃப்எஸ்பிஎல் உள்ளூர் மொழியில் நமது வெளிப்படைத்தன்மைக்கான பொறுப்பு மற்றும் நியாயமான கடன் நடைமுறைகளை வெளிப்படுத்தி அறிக்கை வெளியிட்டு அதை அலுவலக வளாகங்களில் வைத்து கடன் அட்டையிலும் பதிவு செய்ய வேண்டும்.

ஒ. கடன் வாங்குபவர்களின் மீதமுள்ள கடன் தொகை குறித்து அவசியமான விசாரணைகள் செய்ய கள ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்.

ஓ. கடன் வாங்குபவர்களுக்கு இலவச பயிற்சி அளிக்க வேண்டும். கள ஊழியர்களுக்கு அப்படிப்பட்ட பயிற்சி தருவதற்கு பயிற்சி அளிக்க் வேண்டும். கடன் மற்றும் பிற சேவைகள் குறித்த செயல்முறைகள் மற்றும் திட்டங்கள் குறித்து கடன் வாங்குபவர்கள் முழுவதுமாக அறிந்துகொள்ளும் விதத்தில் பயிற்சி அளிக்க வேண்டும்.

ஔ. வட்டி விகிதங்கள் விதிக்கப்படுவது மற்றும் பிஎஃப்எஸ்பிஎல் அமைத்திருக்கும் குறைதீர்க்கும் செயல்முறை மற்றும் வெளியிடப்பட்ட கையேடு (வட்டார மொழியில் வெளியிடப்பட்டது) முக்கியமாக அதன் அனைத்து அலுவலகங்களிலும் மற்றும் அதன் இணையதளத்திலும் வைக்கப்பட வேண்டும். அதில் குறைதீர்க்கும் செயல்முறை அதிகாரி மற்றும் தொடர்பு விவரங்கள் இருக்க வேண்டும். ஒரு மாதத்துக்குள்ளாக புகார்/பிரச்னை நிவர்த்தி செய்யப்படாவிட்டால் இந்திய ரிஸர்வ் வங்கி உடைய பொறுப்பில் உள்ள அதிகாரி மற்றும் அவருடைய தொடர்பு விவரங்கள் இருக்க வேண்டும்.
பிஎஃப்எஸ்பிஎல் உடைய பிரகடனம் ஊழியர்களின் பொருத்தமற்ற நடத்தையைத் தடுத்தல் மற்றும் குறிப்பிட்ட சமயத்தில் குறைதீர்த்தல் பொறுப்பாகும். அது கடன் ஒப்பந்தத்திலும் நியாயமான நடைமுறைக் குறியீட்டிலும் (உள்ளூர் மொழிகளில்) அனைத்து அலுவலக வளாகங்களிலும் இணையதளத்திலும் இருக்க வேண்டும்.

கடன் சம்பந்தப்பட்ட வகைகள் மற்றும் அவைகளுடைய முக்கிய அம்சங்கள் அலுவலக வளாகங்களிலும் இணையதளத்திலும் வைக்கப்பட வேண்டும்.

இந்திய ரிசர்வ் வங்கியுடைய "உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள்" குறித்த வழிகாட்டுதல்களுக்கு இணங்கி பிஎஃப்எஸ்பிஎல் செயல்படும் மற்றும் கடன் வாங்குபவர்களின் கடன் திரும்பச் செலுத்தும் திறனை உறுதி செய்துகொள்ள உரிய அக்கறை எடுத்துக் கொள்ளும்.

ஏதாவது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் கூடிய கடன் அல்லாத வகைகள்,, உரிமைகோரல் தீர்வு, நியமனம் முதலியன உள்ளூர் மொழியில் விளக்கமாக அறிவுறுத்தப்படும் மற்றும் விண்ணப்பதாரரிடமிருந்து அவசியமான சம்மதம் பெற வேண்டும்.
நிறுவனம் பொருத்தமற்ற ஊழியர்களின் நடத்தைக்கும் கடன் வாங்குபவர்களுக்கு குறிப்பிட்ட சமயத்தில் குறை தீர்வு அளிக்கவும் அதன் பொறுப்பை அறிவிக்கிறது.

**வசூல் செயல்முறை**

**கூட்டுப் பொறுப்புக் குழுக்கள்:**

பாஹல் வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள்-இந்திய நுண்கடன்கள் (ரிசர்வ் வங்கி) கட்டுப்பாடுகள், 2011 கடன் வசூலிப்புக்கு கடைபிடிக்கிறது. அதன்படி கடன் வாங்குபவர், பிஎஃப்எஸ்பிஎல் இருவரும் பரஸ்பரம் தீர்மானிக்கும் குறிப்பிட்ட இடத்தில் கடன் வசூலிப்பார்கள். எனினும், கள பணியாளர்கள் தொடர்ந்து இரண்டு அதற்கும் மேற்பட்ட சமயங்களில் குறிப்பிடப்பட்ட இடத்துக்கு கடன் வாங்குபவர் வரத் தவறினால் அவர் வசிக்கும் இடத்திலோ கடன் வாங்குபவர் பணி புரியும் இடத்திலோ கடன்தொகை வசூலிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

**மற்றவைகள்:**

மின்னணு தொழில் நுட்ப நேரடி பரிமாற்றம் மூலம் கடன் வசூலிக்கப்படுகிறது. நிராகரிக்கப்படும் பட்சத்தில் வாடிக்கையாளரிடமிருந்து பணமாக அவர் இருக்கும் இடம் மற்றும் சமயத்தில் வசூலிக்கப்படும்.
பிஎஃப்எஸ்பிஎல் கடன் விண்ணப்பிப்பதற்கான செயல்முறை சிரமாமனது அல்ல என்பதை உறுதி செய்ய வேண்டும். கடன் வழங்குதல் முன்பே தீர்மானிக்கப்பட்ட நேர அட்டவணைப்படி நன்கு வரையறுக்கப்பட்ட செயல்முறைப்படி வழங்கப்படுகிறது.

**கடன் ஒப்பந்தம்/கடன் அட்டையில் வெளிப்படுத்தல்கள்**

பிஎஃப்எஸ்பிஎல் உடைய குழுவால் அங்கீகரிக்கப்பட்ட விதிமுறைப்படியான கடன் ஒப்பந்தம் விரும்பத்தக்கபடி வட்டார மொழியில் இருக்கிறது.

இந்த கடன் ஒப்பந்தத்தில் கீழ்கண்டவைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும். சில நிபந்தனைகள் தனி நபர் கடன்கள் மற்றும் பாதுகாப்பான சொத்து வணிகத்துக்குப் பொருந்தாது.

* கடனுக்கான அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

* கணக்கிடப்பட வேண்டிய வட்டி விகிதம், அதைக் கணக்கிடும் வழிமுறை,, செயலாக்கக் கட்டணம், உறுப்பினருக்குப் பொருந்தும் இன்ஷியூரன்ஸ் பிரீமியம், வட்டி விகிதம் மற்றும் ஆபத்து தர நிலைகள் மற்றும் பகுத்தறிந்து வெவ்வேறு கடன் வாங்கும் வகையினர்களுக்கு வெவ்வ்று விதமான வட்டி விகிதங்களுக்கு சில்லறைக்கடன் விவரம் கடன் வாங்குபவருக்கு அவருடைய விண்ணப்ப படிவத்தில் வெளிப்படுத்தப்படும் மற்றும் அனுமதிக் கடிதம்/கடன் அட்டை/உண்மைத்தாள் வெளிப்படையாகத் தெரிவிக்கப்படும். (இந்திய சிறு நிதிக் கடன்களுக்குப் பொருந்தாது.)

* இந்திய சிறுநிதிக் கடன்களுக்கு தாமதமாகச் செலுத்தப்[படும் கடனுக்கு அபராதக் கட்டணம் கிடையாது.

* கடன் பெறுவதற்கு பாதுகாப்பு வைப்புத் தொகை/வரம்புத் தொகை கடன் வாங்குபவரிடமிருந்து பெறப்படாது மூன்றாம் தரப்பினர்கள் மூலமாகவும் பெறப்படாது என்பது நிபந்தனை.

* கடன் வழங்கப்படுவதிலிருந்து முதல் தவணை திரும்பச் செலுத்துவதற்கான இறுதி தேதி தடைக்காலம்.

* கடன் வாங்குபவரின் தகவல்கள் மதிக்கப்பட வேண்டும். வாடிக்கையாளருடைய சம்மதம் இன்றியோ ஒழுங்குமுறைப்படி தேவைப்பட்டால் அல்லாது எந்த தகவலையும் மூன்றாம் தரப்பினருடன் பகிரக்கூடாது.

* அங்கீகரிக்கப்பட்ட கடனை நிறுவனத்தால் வழங்கப்படும் வேறு எந்த வகைக் கடனுடனோ/சேவைகளுடனோ அல்லது மூன்றாம் தரப்பினருடனோ இணைக்கக்கூடாது.

* குறைதீர்க்கும் வழிமுறை

* வெளிப்படையான பொறுப்பு மற்றும் இந்திய ரிஸர்வ் வங்கியால் நிர்ணயிக்கப்பட்ட நியாயமான கடன் நடைமுறைகள்

* நிறுவனம் பொருத்தமற்ற ஊழியர்களின் நடத்தையைத் தடுப்பதற்கும் குறிப்பிட்ட சமயத்தில் குறை தீர்வு அளிக்கவும் பொறுப்பு ஆகும்.

* நிறுவனம் கடன் தொகை திரும்பச் செலுத்துவதற்காக அதன் வாடிக்கையாளர்களுக்கு அவர்களுடைய பணப்புழக்கத்தின் அடிப்படையில் வாராவாரமோ, இரண்டு வாரங்களுக்கு ஒரு முறையோ, மாதம் ஒரு முறையோ செலுத்த கால அவகாச விருப்பத் தேர்வுக்கு அனுமதிக்கிறது.

பிஎஃப்எஸ்பிஎல் கடன் வழங்கப்பட்ட பின்னர் கீழ்கண்ட தகவல்களுடன் கூடிய கடன் அட்டை அளிக்கிறது:

* கடன் வாங்குபவரின் அடையாள அட்டை மற்றும் தொடர்புடைய தகவல்.

* கடன் அட்டையில் பதிவு செய்யப்பட்டவைகள் உள்ளூர் மொழியில் இருக்கும்.

* வருடாந்தர வட்டி விதிக்கப்படுவது, செயலாக்கக் கட்டணம், இன்ஷியூரன்ஸ் முதலியன.

* கடனின் முக்கியமான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்.

* தவணைத்தொகைகள் சேர்த்து பெற்றுக் கொண்ட திரும்பச் செலுத்தப்பட்டவைகளுக்கும் இறுதியாகச் செலுத்தப்பட்டதற்கும் ஒப்புகைகள்.

* குறைதீர்க்கும் முறை நோடல் அதிகாரியின் பெயர் மற்றும் தொடர்பு எண்.

* கடன்சாரா வகைகள் அளிக்கப்படுவது கடன் வாங்குபவர்களுடைய முழு சம்மதத்துடனும் கட்டண அமைப்பின்படியும் இருக்கும்.

* கடன் அட்டையில் பதிவுகள் அனைத்தும் வட்டார மொழியில் இருக்கும்.

**வலுக்கட்டாயமற்ற மீட்பு முறைகள்**

பிஎஃப்எஸ்பிஎல் இந்திய ரிஸர்வ் வங்கியால் வரையறுக்கப்பட்ட "உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள்" வழிகாட்டுதல்களை பின்பற்றுவதை உறுதி செய்கிறது. கடன் வழங்குவதற்கு முன்பாக வாடிக்கையாளர் மீது உரிய அக்கறை செலுத்துகிறது.

பிஎஃப்எஸ்பிஎல் நியமிக்கப்பட்ட இடமான கூட்டங்கள் மையத்தில் அதன் அனைத்து வசூல்களையும் சேகரிக்கிறது. கடன் வாங்குபவர் கூட்ட மையத்திற்கு 2 அல்லது அதற்கும் மேற்பட்ட முறைகள் வருகை தரத் தவறினால் களப் பணியாளர் அவருடைய வசிக்கும் இடத்துக்கோ கடன் வாங்குபவர் பணி செய்யும் இடத்திற்கோ கடன் மீட்புக்குச் செல்வார்.

பிஎஃப்எஸ்பிஎல் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே மாதிரியான திட்டங்கள் மற்றும் செயல்முறைப்படி பணியாளர் நியமனம், பயிற்சி மற்றும் மேற்பார்வை சம்பந்தப்பட்ட கொள்கையைக் கடைபிடிக்க உறுதி கொள்கிறது. பிஎஃப்எஸ்பிஎல் கொள்கை களப் பணியாளர்களுக்கு பயிற்சித் திட்டம் மூலம் கடன் வாங்குபவர்களிடம் கடன் திரும்பப் பெறுவதற்கு தவறான வற்புறுத்தும் விதமாக அல்லாது நடந்துகொள்ள வேண்டிய உரிய நடத்தையைக் கடைபிடிக்க பயிற்சி அளிப்பது.

பிஎஃப்எஸ்பிஎல் கொள்கை கள ஊழியர்களின் மதிப்பீடு, உரிய நடத்தை முறை கடைபிடிப்பதன் மூலமும் மற்றும் வாடிக்கையாளர் திருப்தி மூலமும் உரிய ஊதியம் பெற தரம் நிர்ணயிக்கப்படும்.

பிஎஃப்எஸ்பிஎல் பணியாளர்கள் மீது நடத்தை நெறிமுறையில் வகைப்படுத்தப்பட்டுள்ள எந்த ஒரு செயலுக்கு எதிராக முறைகேடாக நடந்தாலும் உரிய ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பிஎஃப்எஸ்பிஎல் கடன் திரும்பபெறுவதற்காக எந்த ஒரு முகவரையும் ஈடுபடுத்தவோ, வெளியிலிருந்து ஏற்பாடு செய்யவோ இல்லை.

**உள் கட்டுப்பாட்டு செயல்முறை**

பிஎஃப்எஸ்பிஎல் உரிய நியமிக்கப்பட்ட நபர்களைக் கொண்ட கண்காணிப்புக் குழு தணிக்கை மற்றும் அவ்வப்போது ஆய்வுகள் நடத்துதல் சேர்த்து உரிய உள் கட்டுப்பாட்டு செயல்முறைகளை நிறுவுவதற்கு அமைத்திருக்கிறது.